7 காலணா Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு


"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மெடுத்தோதுவோமே"

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர்:
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

காரியாலயம்: பைக்ராப்ட்ஸ் சாலே, திருவல்லிக்கேணி, சென்னை. சனி 11-2-33

ஏற்றத்தின் பலன்



ஹிந்து மதம் என்ற புனிதக் கேணியினின்று ஏற்றத்தின உதவியால் ரங்கய்யர், ராஜா முதலியவர்கள் அன்பென்னும் தண்ணீரைப் பாய்ச்சுகின்றனர். ஸ்ரீயுத ராஜாஜி ஹரி ஜனங் களுக்குப் பலனைப் பரிமாறுகிறார். இதைக் கண்டு யதா பூர்விகள் நடுங்குவானேன்? இதுவே புண்ணிய சேவை யன்றோ? ஆகவே "இப் புனிதப் பணிக்கு சேர வாரும் ஜகத்தீரே!

முந்திரிக் கோட்டை மாதிரி

“காலநிலை சரியாயில்லை. ஆகவே சர்க்கார் சேவகர்களின் சம்பளக் குறைவை இவ்வருடம் அதிகப்படுத்த முடியாது” என்று பிரிட்டிஷ் பிரதம மந்திரியான ராம்சே மாக்டனால்டு பார்லிமெண்டில் சொல்லிக் கொண்டிருக்கிறார். உலகில் ஏற்பட்டுள்ள பணப் பஞ்சத்தையும், வியாபார மந்தத்தையும், பொது ஜனங்களின் துயரையும் கவனித்து சர்க்கார் உத்யோகஸ்தர்களுக்கு தற்போதுள்ள சம்பளமே போதுமானது என்று பிரிட்டிஷ் சர்க்கார் சீமையில் சொல்லி விட்டனர்.

ஆனால் அதே பிரிட்டிஷ் சர்க்காருக்கு கீழேயுள்ள டெல்லி துரைத்தனம் தனது வரவு செலவுக் கணக்கைப் பற்றிச் சிறிதேனும் ஆலோசியாது அதிகப் பிரசங்கித்தனமாக சம்பள வெட்டில் 5% உயர்த்துவதாக வாக்களித்தது. அதைவிட முந்திரிக் கொட்டை சென்னை சர்க்கார் 10% உயர்த்துவதென்று முனைந்திருக்கிறது. ஆனால் பிரிட்டிஷ் சர்க்காரோ 0% தான் உயர்த்தி யிருக்கின்றனர்.

பிரிட்டனில் பொது ஜனங்கள் கஷ்டப்படுவதைவிட பத்துப் பங்கு அதிகமாக இந்திய மக்கள் கஷ்டப்படுகின்றனர். சென்னை மாகாண விவசாயியின் கஷ்டத்தையோ சொல்லத் தேவையில்லை. ஜனங்களின் மீது சுமத்தப்பட்டுள்ள வரிச் சுமையைக் குறைப்பதற்கே சர்க்கார் இன்று பிரயத்தனம் செய்ய வேண்டும். அதை மறந்து தனது சேவகர்களின் நலத்தை மட்டும் சர்க்கார் கவனித்தால் நாட்டின் ஏழை மக்களின் கதி என்னாவது? ஏழைகளழுத கண்ணீருக்கு பிற்காலத்தில் சர்க்கார் ஜவாப் சொல்ல வேண்டு மன்றோ! ‘உடலுக்குத் தகுந்த சட்டை தைக்க வேண்டு’மென்ற பழமொழியை சர்க்கார் உணரவில்லையோ!

பிரிட்டன் மட்டுமன்று, இன்னும் இதர ஐரோப்பிய நாடுகளிலெல்லாம் அரசாங்கங்கள் தங்கள் அதிகாரிகளின் சம்பளங்களைக் குறைத்துக் கொண்டிருக்கும் போது டெல்லியும், சென்னையும் மட்டும் துள்ளிக் குதிப்பானேன்? ஏகாதிபத்தியத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும் நல்ல பிள்ளைகளான சர்க்கார் சேவகர்களை ‘நயிச்சியம்’ செய்து கொள்வதே சர்க்கார் ஆசையென்று இதனின்று தெரிகிறது. அதிலும் முக்கியமாக பெரிய சம்பளம் வாங்கும் மாகாண அதிகாரிகளை மேலும் மேலும் கொழுக்க வைக்கவேண்டுவதே சர்க்காரின் சிரத்தையோ?

“இங்கே கவனி அய்யா!”

‘சுதேசியத்தை ஆதரியுங்கள்!’ என்று கத்துகின்றவர்கள் கத்திக் கொண்டே யிருக்கிறோம். ஆனால் புதிதாகத் தோன்றிய இந்திய சுதேசித் தொழிற் சாலைகளோ ஓங்காமல் இருந்து கொண்டே யிருக்கின்றன. ஆனால் அந்நிய நாட்டினின்று இறக்குமதி யாகும் சில்லரைப் பொருள்களுக்கோ கணக்கு வழக்கில்லை. உதாரணமாக சென்னையில் போன வாரத்தில் இறக்குமதியா யுள்ள ஒரு சாமான் ஜாபிதாவை இங்கு கொடுக்கின்றோம்.

லண்டனிலிருந்து :—பழைய நியூஸ் பேபர் கிரயம் 2500 ரூ. பென்ஸில் முதலியன 435 ரூ. எழுதும் காகிதம் 500 ரூ. பேனா 550 ரூ. பௌண்டன் பேனா 356 ரூ. பிஸ்கோத்து 1560 ரூ. க்ஷவர ப்ரஷ்கள் 542 ரூ. சீட்டுக் கட்டு 269 ரூ. சிமிட்டி 2659 ரூ.

ஆண்ட்வர்ப்பிலிருந்து:—சீப்புகள் 520 ரூ. கடுதாசிக் கவர்கள் 516 ரூ. அட்டைகள் 800 ரூ.

லிவர்ப்பூலிலிருந்து:—பிஸ்கோத்து 3510 ரூ. பௌண்டன் பேனா 390 ரூ. ஸ்லேட்டுகள் 930 ரூ. முகப்பவுடர் 936 ரூ. புகையிலை 18930 ரூ.

ஹாங்காங்கிலிருந்து :—சுக்கு 700 ரூ.

ஹாம்பர்க்கிலிருந்து :—விளக்குகள் 1662 ரூ. பாட்லாக்குகள் 569 ரூ. கண்ணாடி வளையல்கள் 530 ரூ. கண்ணாடிக்ளோப் 800 ரூ. கண்ணாடி மாலைகள் 600 ரூ. விளையாட்டு சாமான் 650ரூ. பல்லுப் பசை 609 ரூ. சீப்புகள் 598 ரூ.

மெல்போர்னிலிருந்து :— ஸ்னான சோப் 1254 ரூ.

நியூயார்க்கிலிருந்து :—ஸ்னான சோப் 650ரூ.

ஆம்ஸ்டர்டாம்மிலிருந்து: புகையிலை 1807 ரூ.

ஜீனோவாவி லிருந்து: — கொம்புச் சீப்பு 1200 ரூ.

மேலே சொன்ன சாமான்க ளத்தனையையும் இந்தியாவிலேயே செய்ய ஸ்வதேசி தொழிற் சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளை வளர்க்க பொதுஜன ஆதரவும், சர்க்கார் பாதுகாப்புச் சட்டமும் ஏற்படாமற் போனால் அவை உருப்படமாட்டா. ‘தன் கையே தனக்குதவி’ என்ற பழமொழிப்படி என்றைக்கு நம் நாட்டவர் நடப்பார்களோ?

மகா தியாகம்

மகாத்மாவின் உபவாஸ சரித்திரம்

(தபாற்கூலி உள்பட 5 அணா ஸ்டாம்பு அனுப்பவும்

இறக்குமதிக் கல்வி வேண்டாம்

தற்காலக் கல்வி முறையால் நமக்கு ஏற்பட்டுள்ள சீர்கேடுகளை விளக்கி அலிகார் முஸ்லீம் சர்வ கலாசாலை உப அத்யக்ஷகரான டாக்டர் சையத் ராஸ் மாசூத் பேசி யிருப்பதாவது :

"பிரிட்டிஷ் வியாபாரிகளை நாம் இந்நாட்டில் இறக்குமதி செய்த பொழுதே தற்போது பள்ளிக்கூடங்களில் போதிக்கப்பட்டு வரும் மேனாட்டுக் கல்வி முறையையும் நாம் இறக்குமதி செய்து கொண்டோம். அக்கல்வியைப் பயின்றவர்களில் ஒரு சிலர் மேதாவிகளாகத் திகழ்வது உண்மையாயினும், பொதுவாக அதனால் தீமையே விளைந்திருக்கிறது; இன்றும் விளைந்து வருகின்றது. நம்முடைய இயற்கை அறிவின் வளர்ச்சியை அது தடுக்கின்றது. நம் மக்களின் மனதையே பிரிட்டிஷாருக்கு அடிமையாக்கி விடுகின்றது. ஆன்ம உணர்ச்சியையே அழித்து விடுகின்றது; தேசத்தை மறக்கச் செய்கின்றது. நமது குடும்ப வாழ்க்கையின் சிறப்பையே கெடுக்கின்றது. நம்மையே நாம் நம்ப முடியாமல் செய்கின்றது. நமது முன்னோர்களின் கலை ஒளிர்வை மழுங்கச் செய்கின்றது; அதன் காரணமாக நமது தர்மத்தையே நாம் மறந்து விடுகின்றோம்.

"ஷேக்ஸ்பியரையும், மில்டனையும் கரைத்துக் குடித்து விட்டு வாந்தி யெடுப்பவர்களைக் கண்டால் எனக்குப் பிடிக்கவில்லை. நமது புராதனக் கவிகளில் ஒரு வரி கூடத் தெரியாத இந்த ஆத்மாக்களின் கல்வி எதற்குப் பிரயோஜனம்? ஏழைகளுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற சிந்தனையை ஊட்டாத கல்வி எதற்கு? பெரிய காரியங்களுக்கு நாம் உபயோகிக்கக் கூடிய நமது மாணவர்களின் சக்தியை யெல்லாம் அழித்துப் பாழாக்கி வருகின்றன நமது சர்வ கலாசாலைகள். இந்தியா மேன்மையுற வேண்டுமாயின், இந்திய மாணவர்களுக்குத் தேசிய பாஷையில் தேசியக் கல்வியே போதிக்க வேண்டும்.

இந்தியத் தாயின் அந்தராத்மா பிரகாசிக்கத் தொடங்கினால், அவளைச் சூழ்ந்துள்ள தீங்குகள் உடனே மறைந்து போகும். அவள் கலை வளத்துக்கு வெளி நாடுகளினின்று பிச்சை வாங்கத் தேவை யில்லை. பண்டைய காலத்தினின்று இந்நாட்டில் வழங்கி வரும் கலைப் பயிற்சியும் அத்யாத்ம போதனையுமே போதுமானது.

சவுக்கடி மசோதா

"மூச்சு விடு முன்னே
முன்னூறு நானூறும்
ஆச்சென்றால் ஐந்நூறு மாகாதோ"

என்ற ரீதியில் இப்போது துரைத்தனத்தார் விதம் விதமான மசோதாக்களை நிறைவேற்றி வைத்துக் கொள்கின்றனர். இனிமேல் வரப் போகும் சட்ட சபைகள் என்னவா யிருக்குமோ என்று பயந்து, தலையாட்டித் தம்பிரான்களடங்கிய இப்போதுள்ள சட்ட சபை மூலமாகவே பல சட்டங்களை விரைவில் செய்து வைத்துக் கொள்ள சர்க்கார் விரும்புகிறது. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுகிறார்கள்.

பம்பாய் சட்டசபையில் 'சவுக்கடி மசோதா'வென்று ஒன்றை நிறைவேற்றி, மிருகத்தனத்திற்கு பொட்டுக் கட்டி வைத்துக் கொள்ள அங்குள்ள அதிகாரிகள் விரும்புகின்றனர். 'தவறு செய்த சிறுவர்களுக்கு சவுக்கு தண்டனை தருவதும் அநாகரிகம்' என்று உலகம் கருதுகின்றது. ஆனால் பம்பாய் துரைத்தனத்துக்கு நாகரிகமாவது, மண்ணாங் கட்டியாவது?

"கலவரங்களை அடக்குவதற்காக சவுக்குகளை உபயோகிக்க போலீசாருக்கு அநுமதி யிருக்க வேண்டும்" என்பதே அந்தப் புதிய மசோதாவின் கருத்து என்கிறார்கள். இராணுவச் சட்டம் கோர தாண்டவம் செய்யுமிடங்களில் தான் சவுக்கடிச் சத்தம் செவிபடுமென்பார்கள். இனிமேல் பம்பாய் மாகாணத்தில் சாதாரண போலீஸ்காரன் கூட சவுக்கு வீசுவதற்கு அநுமதி பெற்று விடுவான் போலிருக்கிறது. ஏறுகின்றவனுக்கு ஏணி வைத்துக் கொடுப்பது போல் ஏற்கனவே அதிகாரத் திமிரால் அலையும் சில்லுண்டி தேவதைகளில் சில இந்த சவுக்கடி அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யா என்பதற்கு என்ன உறுதி!

வகுப்புக் கலவரங்களை அடக்க இந்த சவுக்கடி தர்பார் பயனளிக்கப் போவதில்லை. ஏனெனில் மதப் பித்தத்தினால் ஆவேசம் கொண்ட மூடனை சவுக்கடி சாந்தப் படுத்தி விடாது. ஆனால் எந்த அதிகாரியாவது விரும்பினால் சவுக்கடி சட்டத்தின் உதவி கொண்டு அஹிம்சா தர்மிகளடங்கிய ஊர்வலங்களை மிருகத்தனமாக கலைப்பதற்கும் உபயோகப் படுத்திக் கொள்வானன்றோ! லத்தி ராஜ்யத்தாலும் கையாலாகாது, பிரம்பு அரசினாலும் பயன் காணாது இப்போது சவுக்கடி தர்பாருக்கு வந்து விட்டார்கள். என்னே மிருகப் பிராயப் பிற்போக்கு!

"புருஷன் பேரைச் சொல்லு"

இந்த மாதிரி ஒரு ஸ்திரீயைக் கேட்டால் அவள் என்ன செய்வாள். 'சிதம்பரம்' என்ற தன் புருஷன் பெயரைச் சொல்ல மனமில்லாது ஒரு பெண் 'எங்க ஊருக்கு டிக்கட் கொடுங்கள்' என்று கேட்டாளென்று ஒரு கதை சொல்வார்கள். ஆங்கிலம் படித்த இன்னொரு பெண் தன் புருஷன் பெயரை பகிரங்கமாகச் சொல்ல நாணப்பட்டு, Elder brother hill (அண்ணாமலை) என்று சொன்னாளாம். அதே மாதிரி டாக்கா என்ற ஊரிலுள்ள ஸ்திரீகளுக்கும் ஒரு சோதனை வந்திருக்கிறது. "உங்கள் வீட்டில் உள்ள 14 வயதினின்று 35 வயதுக்குட்பட்ட இளைஞர்களின் பெயரை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொடுக்க வேண்டும். அவர்களில் ஒரு மாதத்துக்கு வெளியே போகக் கூடியவர்கள் யாரென்பதையும் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு தெரிவிக்காவிடில் அபராதமோ ஆறு மாதம் சிறையோ கிடைக்கும்" என்று அந்த ஊர் மாஜிஸ்திரேட் ஓர் உத்தரவு போட்டிருக்கிறார். இவ்வாறு மட்ட ரசமான உத்தரவுகளை அடிக்கடி போட்டால் அந்த ஊரை அத்தனை பேரும் காலி செய்து விடுவார்களென்பதில் ஐயமில்லை. மாஜிஸ்திரேட்டும் தனிக் காட்டு ராஜா ஆக வேண்டியது தான்.

வெள்ளைக் கடுதாசி மர்மம்

பார்லிமெண்டில் இந்தியா மந்திரியான ஸர் ஸாமுவேல் ஹோர், "இந்திய அரசியல் சீர்திருத்தத்தை விளக்கும் 'வெள்ளைக் கடுதாசி' என்ற அறிக்கை யொன்றை பிரசுரிக்கப் போகின்றோம். பிறகு அதை ஓர் கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டி ஆராய்ச்சி செய்யும். எப்போது அந்த வெள்ளைக் கடுதாசி வெளியிடப் படுமோ ஒன்றும் சொல்வதற்கில்லை" என்று கூறி யிருக்கிறார். வெள்ளைக் கடுதாசியிலும், கூட்டுக் கமிட்டியிலுமாக இந்தியாவின் நல்ல விதியை இழுத்துப் போடப் பார்க்கின்றனர் பிரிட்டிஷார். இந்த அபூர்வமான வெள்ளைக் கடுதாசி என்றைக்குத் தயாராகுமென ஸாமுவேல் ஹோருக்கே தெரியாதென்றால் வேறு யாருக்குத் தான் தெரியப் போகின்றது. கேள்வி ஒரு புறம் இருக்க பதிலை ஓர் விதமாகச் சொல்லித் தப்புவதில் இந்த ஸாமுவேல் ஹோர் பெரிய ஆளென்பதில் ஐயமில்லை.

"நாடகத்துக்கு நேரமில்லை"

அலஹாபாத்தில் ஸர் ஸாப்ரூ தலைமையில் நடக்கவிருந்த மோதிலால் தினக் கொண்டாட்டத்தை 144 போட்டு அந்த ஊர் மாஜிஸ்திரேட் தடுத்து விட்டாரென்பதைப் போன 'சங்கி'ல் சொன்னோம். அந்த 144க்கு 24 மணி நேர ஆயுள் தான் கொடுக்கப்பட்டிருந்தது. மோதிலால் தினமும் 24 மணிதானே! ஆகவே அன்று பொதுக் கூட்டம் நடத்த இயலாது போயிற்று. ஆனால் அத்தகைய உத்தரவு போட்டதால் நகர மாந்தர் அனைவரும் மோதிலாலைப் பற்றியே நினைத்திருப்பரன்றோ?

இவ்வாறு மாஜிஸ்திரேட் எதேச்சாதிகாரமாக நடந்து கொண்டது தவறு என்பதை நிரூபிக்க பண்டித ஹிரதயசிங் என்பார் செஷன்ஸ் ஜட்ஜ் சந்நிதியில் நீதி வழங்கும்படி கேட்டார். அப்போது செஷன்ஸ் ஜட்ஜ் சொன்னார்: "24 மணி நேரத்தோடு அவ்வுத்தரவு தீர்ந்து போய் விட்டதே. இனிமேல் அந்த விஷயத்தைப் பற்றி ஆலோசனை செய்வதா? அந்த நாடகத்துக்கு இனி நேரமில்லை" என்று அப்ளிகேஷனைத் தள்ளி விட்டார். ஒரு மாஜிஸ்திரேட்டின் மானத்தைக் காக்க யார் நாடகம் நடித்தார்களென்பது தெரிகின்றதா?

காந்திக் குல்லா காபுரா!

காந்திக் குல்லாவையும், கதர்த் துணியையும் கண்டால் காபுராக் கண்டு சில அதிகாரிகள் சிறி விழுந்து கொண்டிருந்தனர். காலம் மாறி விட்டது. கதர் இயக்கம் தேச க்ஷேமத்துக்காகவே ஏற்பட்டது என்பதை அரசாங்கத்தாரும் உணர்ந்து கொண்டனர். சர்க்கார் அதை எவ்வளவோ தடவை பகிரங்கமாகக் கூறியும் இருக்கின்றனர். அப்படிக் கிருந்தும் 'குவெட்டா' என்ற ஊரில் யாரோ ஒரு துக்கடா அதிகாரி காந்திக் குல்லா மீது தடை உத்தரவு போட்டதாக டெல்லி சட்ட சபையில் ஓர் வதந்தி வந்தது. சர்க்கார் அவ் வதந்தியை மறுத்தது பற்றி சந்தோஷம். ஒரு வேளை அந்த ஊர் அதிகாரிக்கு காந்திக் குல்லா மீது இன்னும் காபுரா இருக்குமாயின் அப்பேர்ப்பட்ட பயங்கொள்ளி அரசாங்கத்துக்கு ஏற்றவனல்ல. எளிய துணிக் குல்லாவை இந்தியன் அணிவது அந்த மாஜிஸ்திரேட்டுக்கு பிடிக்கவில்லையாயின் அவர் வெறி கொண்டு ஜில்லா முழுவதிலும் உள்ள அத்தனை பேரும் 'நார்த் தாம்டன் டாப் ஹாட்' தரிக்கவேண்டு மென்று உத்தர விடுவார் போலும்!

ஜகத் குருவுக்கு மகாத்மா பதில்

பூரி சங்கராச்சாரியார் ஸ்ரீ ரங்கய்யருக்கு விடுத்த கடிதத்தையும், அவற்றிற்கு ரங்கய்யர் அளித்த பதில்களையும் போன "சங்கி"ல் பிரசுரித்தோம். இவ்விஷயமாக மகாத்மாஜி வெளியிட்டுள்ள கருத்துக்கள் பின்வருமாறு :—

ரங்கய்யரின் மசோதாக்களைப் பற்றி ஜகத் குரு அவ்வாறு கடிதமெழுதியதற்கு நான் வருந்துகிறேன். அம் மசோதாக்கள் மத ஸ்வதந்திரத்தில் எவ்வகையிலும் தலையிடவில்லை என்பதை நான் தைரியமாகச் சொல்லுகிறேன். அவை யிரண்டும் மதத்தைப் பாதுகாக்கவே செய்கின்றன. தாங்கள் பிரார்த்தனைகள் செய்கையில் தங்களுடன் எவரெவர்களிருக்கலாம் என்பதை நிர்ணயித்துக் கொள்ள கோயில் பக்தர்களுக்கு எப்பொழுதும் உரிமையுண்டு. ஜனங்களுக்குள்ள அவ்வுரிமையை ஸனாதனிகள் பறிக்க முடியாது. கோயிலின் ஆகம தர்மங்களுக்கு விரோதமாக விருந்தால் கூட இந்த உரிமையைப் பக்தர்களுக்கு அளித்தே தீர வேண்டும்.

இவ்வுரிமையை அவர்களிட மிருந்து பிடுங்கியே இருக்கக் கூடாது. அப்படி யிருக்கையில் அவ்வுரிமையை அவர்களுக்கு மீண்டும் வாங்கித் தர ஏற்பாடுகள் நடந்தால் அது மத விஷயங்களில் தலை யிடுவதாகாது. ஸனாதன தர்மத்தையே பின்பற்றி வருபவர்களும், ஸனாதனிகள் எந்த சாஸ்திரங்களில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்களோ அதே சாஸ்திரங்களில் நம்பிக்கை வைத்திருப்பவர்களுமான சீர்திருத்தக்காரர்களை ஸனாதன தர்மத்திலிருந்து பிறழ்ந்தவர்கள் என ஜகத் குருவைப் போன்ற பொறுப்பு வாய்ந்த ஒருவர் அழைப்பது சற்றும் நேர்மையானதல்ல. மசோதாக்களை நிறைவேற்றுவது எப்படி சட்ட வரம்பை மீறியதாகு மென்பதும் எனக்குப் புலப்படவில்லை.

ரங்கய்யரையும் ஓரிரண்டு விஷயங்களில் நான் திருத்தவேண்டி யிருக்கிறது. மலையாள ஹிந்துக்கள் இந்த மசோதாக்களுக்கு எதிரான அபிப்பிராயம் கொண்டிருப்பதாகவும், ஆதலால் ஹரி ஜனங்களின் கோயில் பிரவேசத்தை அவர்கள் ஆதரிக்கவில்லை எனப் பொருள் படுமாறும் அவர் பதிலிருக்கிறது. இது தவறு என்பதை குருவாயூர் வாக்கு நன்கு நிரூபித்து விட்டது. நேரே மலையாளத்துக்குச் சென்று திரும்பியவர்களும் கோயில் பிரவேசத்தை மகா

"பெருமையை விட யோக்யதையே உயர்ந்தது"

"நீங்கள் தான் தீவிர ஒத்துழையாதாராயிற்றே. அப்படி யிருக்கையில் கோயில் பிரவேசத்தைச் சாதிப்பதற்காக நீங்கள் எப்படி சர்க்கார் உதவியையும், சட்ட சபையின் ஒத்தாசையையும் நாடலாம்?" என எரவாடாவுக்குச் சென்ற ஒரு நிருபர் மகாத்மாஜியைக் கேட்ட பொழுது அவர் பதில் சொன்னதாவது :—

"ராஜீய விஷயங்களில் நுழையாமல் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல என்னால் முடியாது. ஆனால் நானோ சிறையிலிருப்பதால் ராஜீய விஷயங்களில் பிரவேசிக்க முடியாது. ஆகவே இக் கேள்விக்குப் பதில் சொல்லாத காரணத்தால் எனது பெருமை நாசமானாலும் ஆகட்டும். எனது பெருமையை விட எனது யோக்யதையையே நான் உயர்வாக மதிக்கிறேன். எனது யோக்யதை அழியாமலிருந்தால், என் பெருமைக்கும் அழிவு உண்டாகாது."

ஜனங்கள் பூரணமாக ஆதரிப்பதாகவே கூறுகின்றனர். இரு கக்ஷியினரின் ஒன்று சேர்ந்த மேற் பார்வையின் கீழ் வெகு ஜன வாக்கெடுத்தால் இதைத் தீர்த்துக் கொண்டு விடலாம்.

என்பாலுள்ள குருட்டுத்தனமான அன்பின் காரணமாக ரங்கய்யர் என்னைப் புத்த பகவானுக் கொப்பிட்டிருக்கிறார். அதற்கு நான் முற்றிலும் தகுதியற்றவன். நான் ஒரு சாதாரண மனிதன், சாமானியமான ஊழியன், வேண தவறுகள் செய்யக் கூடியவன்; ஸத்தியத்தை நாடி அலைபவன்.

இன்னொரு காரணத்தைக் கொண்டும் என்னைப் புத்தருக் கொப்பிடுவது சரியாகாது. ஏனெனில் புத்தர் நாஸ்திகர் என்றும் அல்லது வேதங்களில் அவருக்கு நம்பிக்கை கிடையாதென்றும் ஸனாதனிகள் கூறுவர். ஆனால் உண்மையில் அவர் நாஸ்திகருமல்ல; வேதங்களில் நம்பிக்கை யிழந்தவருமல்ல. அது கிடக்கட்டும். நானும் ஒரு நாஸ்திகன் என்றும், எனக்கும் வேதங்களில் நம்பிக்கை கிடையாதென்றும் கருதப்பட்டால், சாஸ்திரங்களுக்கு விரோதமான நவீன கால தீண்டாமையை ஒழித்துப் போடும்படி கேட்டுக் கொள்ள எனக்குப் பாத்தியமில்லாமல் போய் விடும்.

அபாயச் சங்கிலி!

(திப்பு எழுதியது)

"இத்தனை நாள் எங்கே போயிருந்தாய்" என்று என்னை வாசகர்களெல்லாம் திட்ட வேண்டுமென்று முதன் முதலில் கேட்டுக் கொள்கின்றேன். அதற்குக் கைம்மாறாக நான் சவாரி செய்த ரயில் வண்டியைப் பற்றிக் கொஞ்சம் சொல்லப் போகின்றேன்.

நமது பழைய நண்பர்களான மூட்டைப் பூச்சிகளெல்லாம் வண்டிகளில் க்ஷேமமாக இருக்கின்றனர். வாடகை யில்லாத வீடு, இனாமாக சவாரி, காசில்லாமல் ஆகாரம் எல்லாம் கிடைக்கவே அவைகள் கொழுத்துப் போயிருக்கின்றன. பழைய காலத்துக் கிழவிகளின் தோடுகளில் உள்ள சிகப்புக் கல் மாதிரி பள பளவென மின்னுகின்றன. இந்தக் கூட்டத்தை ஒழிப்பது 'ஜீவஹிம்ஸை' செய்வதாகும் என நினைத்து ரயில்வே அதிகாரிகள் விட்டு வைத்திருக்கிறார்களாம். 'திருடர் ஜாக்ரதை' என்று போடப்பட்டுள்ள போர்டையும் மறந்து சில பிரயாணிகள் தூங்குவதுண்டு; அவர்களுக்கு அவ்வப்போது விழிப்பூட்டும் சேவையை மேற்படி மூட்டைப் பூச்சிகள் செய்து வருவதால் அவைகள் இருந்தே தீரவேண்டுமென சில அதிகாரிகள் எண்ணுகின்றார்களாம். ஆனால் கடி பட்டவர்கள் இந்த அதிகாரிகளின் அபிப்பிராயங்களை ஏற்றுக் கொள்வதில்லை. நானும் அந்த கோஷ்டிதான்! வண்டிகளைச் சரியாக வைத்துக் கொள்ளாத அதிகாரிகளைத் தண்டிப்பதற்காக கடுமையான சட்டங்களைச் செய்ய வேண்டுமென்பது எனது ஆசை. நான் என்ன வில்லிங்டனா சட்டம் விடுவதற்கு! என் செய்வது?

'மாமூல்' வாங்கும் 'கூட்ஸ்' குமாஸ்தா, கூட்டம் நெறிய நெறிய மேலும் மேலும் திணிப்பதற்காக டிக்கட் விற்கும் ஸ்டேஷன் மாஸ்டர், வேளா வேளைகளில் டிக்கட் தர ஆரம்பிக்காமல் தூங்கும் கும்பகர்ணன் முதலிய பல அதிகாரிகளுக்கும் பாடம் சொல்லித் தரவேண்டுமென்றும் அதற்காக சில சட்டங்கள், தண்டனைகள் எல்லாம் கடுமையாய் செய்ய வேண்டுமென்பதும் பலருடைய அபிப்பிராயம். இதைப் போலவே அன்று ஸ்ரீயுத நியோகி டெல்லி சட்ட சபையிலும் சொன்னார். நானதைப் படித்த போது கை தட்டினேன்!

ரயில்வே ஊழியர்களின் மீது கடுமையான சட்டங்கள் போடாவிட்டாலும், பிரயாணிகளை மிரட்டச் சட்டங்கள் போடுவதற்கு அதிகாரிகள் பின் வாங்குவதில்லை. 'அபாயச் சங்கிலியை அகாரணமாக இழுப்பவனுக்கு 50 ரூபா அபராதம் போடுவதோடு ஆறு மாதம் காவல் தண்டனையும் தரவேண்டும்' என்று ஓர் மசோதா டெல்லி சட்ட சபையில் தற்போது நுழைந்திருக்கிறது.

வாஸ்தவமாக அவசியம் ஏற்பட்டு ரயில் சங்கிலியை இழுக்க விரும்புகிறவனும் கொஞ்சம் யோசித்தே இனி அதைச் செய்ய வேண்டியிருக்கும். ரயிலில் பிரயாணம் செய்தறியாத சில பாமரர்கள் ஷை அபாயச் சங்கிலியை இழுத்து விடுவதுமுண்டு. அந்தந்த ரயிலிலுள்ள கார்டு துரையும், டிரைவர் துரையும் 'கடுமுடும்' பேர்வழிகளா யில்லாமல், 'ஸாப்பு' பேர்வழிகளா யிருந்தால் தான் பிழைக்கலாம். இல்லாவிட்டால் அபராதம், ஜெயில் இரண்டும் கிடைத்து விடும்.

எதற்காக இந்த மசோதாவைச் சட்டமாக்க சர்க்காருக்கு இவ்வளவு அக்கறை என்பது தெரிந்து விட்டது. "வேணுமென்றே ரயிலை நிறுத்துவதற்காக காங்கிரஸ்காரர்கள் சங்கிலியை இழுக்கின்றனரே என்ன அநியாயம்!" என்று ஒரு சர்க்கார் தாஸர் அன்று சட்ட சபையில் உளறி விட்டார். மேற்படி சங்கிலியை இழுத்துத் தண்டனை யடைய வேண்டும் என்று ஏற்கனவே நிச்சயித்துள்ள ஒருவனுக்கு 'அதிக தண்டனை' என்று சொல்வது ஒரு தடையாகுமா? தயவு செய்து ஸர் ஜோஸப் போர் என்ற அதிகாரி பதில் சொல்லட்டும்.

டெல்லி சட்ட சபையில் ரயில்வே நிர்வாகத்தைப் பற்றி விவாதம் வந்தபோது இந்த அதிகாரி, "வேணுமானால் நான் இந்த அங்கத்தினர் காலடியில் நின்று ரயில்வே நிர்வாகத்தைப் பற்றிக் கற்றுக் கொள்கிறேன்" என்று ஆத்திரமாகச் சொன்னார். அவருக்கு ஆத்திரமிருந்தால் என்னிடம் வந்து கற்றுக் கொள்ளட்டுமே! அதுமட்டு மன்று. இந்தியாவின் ரயில்வே நிர்வாகத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்ய மிஸ்டர் போப் என்ற ஒரு 'நிபுணனை' சர்க்கார் வரவழைத்திருக்கிறது. அவருக்கு மொத்தமாக 15 ஆயிரம் ரூபா கிராண்ட் கொடுக்கப் போகிறார்களாம். யார் பணம்? யார் நிபுணன்? மூட்டைப் பூச்சி கடியை சகித்துக் கொண்டு மூன்றாம் வகுப்புப் பிரயாணம் செய்கின்றானே அவனுடைய பணமல்லவா அது? அவன் தான் ரயில்வே நிர்வாகத்தைச் சீர்திருத்த சரியான நிபுணன் என்று தோன்றுகிறது.

கிழவனுக்கு மண மாலையா ?

கிளியை வளர்த்துப் பூனை யிடம் ஒப்படைப்பது மாதிரி சீர்கேடடைந்துள்ள நமது கல்யாண முறையில் சில சம்பவங்கள் நடக்கின்றன. கிளி போன்ற அழகிய இளம் பெண்களைக் கொண்டு போய் கிழவர்கள் காலில் கட்டி விடுவது என்ன அநியாயம்? சாஸ்திரங்களின் பெயரால் நடக்கும் இக்கொடுமைகளை யெல்லாம் ஒழித்துப் போட ஸனாதனிகளுக்குக் கண்ணில்லை.

கிழவன் முகத்தைப் பார்க்கவோ, அன்றி அவனுக்கு மாலையிடவோ எந்த கன்னிகைக்குத் தான் மனம் வரும்? ஆகவே அத்தகைய கலியாணத்திற்குச் சம்மதிக்காமல் கல்கத்தாவுக் கடுத்த ஒரு ஊரில் ஒரு பெண் வீட்டை விட்டு ஓடி விட்டதில் யாதொரு ஆச்சரியமுமில்லை.

பெண்ணுக்கு 13 வயது; இவளது தகப்பன் மாப்பிள்ளைகளுக்காக அலைந்து அலைந்து களைத்து விட்டான். ஆயிரம், இரண்டாயிரமாக வரதக்ஷிணை கேட்டால் அந்த ஏழை எங்கே போவான்? ஆனால் பெண்ணுக்கோ வயதாகி விட்டதால் கல்யாணத்தை இவ்வருஷமே முடித்துவிட எண்ணினான். கடைசியில் 45 வயது கிழமொன்றைப் பிடித்து, தன் பெண்ணை இரண்டாந்தரமாகக் கொடுக்கத் தீர்மானித்தான். "இளையாளாயின் அதிர்ஷ்டமாக வாழலாம்" என்றான்.

கிழவனுக்கு மாலை சூட்ட பெண் இஷ்டப்படவில்லை. "அவனைக் கட்டிக் கொள்வதைவிட ஏதாவதொரு கன்னியா மாடத்திற்குச் செல்லவே எனக்கு விருப்பம்" என்று பகிரங்கமாக அப்பனிடம் அவள் அறிவித்தாள். ஆனால் அவன் இதை யெல்லாம் பொருட்படுத்தாது கல்யாணத்தை நிச்சயப்படுத்தி, நாளும் வைத்து விட்டான். ஆனால் முகூர்த்த சமயத்தில் பெண்ணைக் காணோம். ஊர் முழுதும் தேடித் தேடி யலைந்தும் அவள் அகப்படவில்லை. ஆகவே கல்யாணம் ரத்தாகி விட்டது.

வரட்டிகளடுக்கி வைக்கப்பட்டிருந்த ஓர் இடத்தில் 3 தினங்களுக்கு அன்ன, ஆகாரமின்றி வெளிவராமல் ஒளிந்து கொண்டிருந்த அந்தக் கிளியும் பிறகு பறந்து வந்து சேர்ந்தது. தன் விருப்பத்தையும் மதியாமல் நடக்க எத்தனித்த தந்தைக்கும் நல்ல பாடம் கற்பித்த அந்தப் பெண்ணைப் போற்றுகிறோம். கல்யாணத்துக் கிருக்கும் கன்னிகைகளுக்கு இது ஒரு படிப்பினையாக இருக்கட்டும்!

"தீருமோ கடன் தொல்லை!"

"பர மண்டலத்திலுள்ள பிதாவே! நாங்கள் எங்கள் கடனாளிகளை மன்னிப்பது போல நீயும் எங்களை மன்னிப்பாயாக" என்று கிறிஸ்துவ சமயத்தின் உன்னதமான பிரார்த்தனை மொழிகள் இருக்கின்றன. ஆனால் பிரார்த்தனை வேளைகளில் அவ் வார்த்தைகளைச் சொல்லும் சில கிறிஸ்தவர்கள் பார்லிமெண்டுக்கு வந்ததும், "இந்தியாவின் கடனா? இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் கொடுத்தால் நாம் தந்த கடன்கள் என்ன ஆவது? பலமான பாதுகாப்புகளில்லாமல் எந்த அரசியலையும் இந்தியாவுக்குத் தரலாகாது" என்று கர்ஜிக்கிறார்கள்.

ஆனால் அதே பிரிட்டிஷ் ராஜீய வாதிகள் தாங்கள் அமெரிக்காவுக்குத் தர வேண்டிய யுத்தக் கடன் தொகை விஷயத்தில் பஞ்சப்பாட்டு பாடி அந்தக் கடனை ரத்து செய்துவிடவேண்டுமென்று கெஞ்சுகின்றனர். அதற்காகவே அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் கூடி ஆலோசிக்கப் போகின்றன.

'எகனமிக் ஜர்னல்' என்ற பத்திரிகையில் சமீபத்தில் கனசியாமதாஸ் பிர்லா ஓர் கட்டுரை எழுதினார். அதில் அவர் இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் சுமை 100 கோடி பவுனிருக்கலா மென்று மதிப்பு போட்டிருக்கிறார். இந்தியாவின் விவசாயிகள் கை மாற்றாக வாங்கியுள்ள கடன்களே 900 கோடி ரூபா யிருக்குமென்று மதிப்பு போடப்படுகிறது. இந்தக் கடனைத் தீர்ப்பதற்கே சக்தி யில்லாமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர். விளை பொருள்களை வெளி நாட்டுக்கு அனுப்புவதால் அந்நியக் கடன் சுமையைக் குறைக்கலாம் என்பதற்கும் வழியில்லை. ஏனெனில் விலைவாசிகள் அடியோடு படுத்துப் போய் விட்டன. ஆகவே என்ன செய்வது? இந்தியாவின் கடனை மறுபடி பரிசிலனை செய்து குறைப்பதுதான் பிரிட்டன் செய்ய வேண்டிய கடமை. மூன்றாம் வருஷத்தில் காங்கிரஸ் கமிட்டியார் ஆராய்ந்து வெளியிட்ட "இந்தியக் கடன் பொறுப்பு" என்ற அறிக்கையைப் பார்த்தால் பெரும்பாலான கடன் தொகைகள் அநியாயமாக ஏற்றப்பட்டவை என்று தெரிகிறது.

அமெரிக்காவிடம் எந்த நன்மையைப் பிரிட்டன் விரும்புகிறதோ அதை முதலில் இந்தியாவுக்கு பிரிட்டன் செய்து காட்டட்டும்!

நமது கிளிஞ்சல் குவியல்

ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்திக்கு 6 மாதம் கடுங்காவலும் 500 ரூ. அபராதமும். அவரோடு கைதியான மற்றும் 6 பேர்களுக்கும் தலா 18 மாதமும் 200 ரூ. அபராதமும்.

சென்னையில் சுயேச்சை தினத்தன்று கூடிய சர்வாதிகாரிகள் மகா நாட்டில் கைதியானவர்களில் 36 பேர்களுக்கு தலா 3 மாதம். கடற்கரையில் ஆக்ஷேபகரமான துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக ரங்கசாமி ரெட்டி என்பவருக்கு 3 மாதம் கடுங்காவல்.

மதுரையில் ஊர்வலம் நடத்தியதற்காக ஸ்ரீமதிகள் பர்வதவர்த்தனிக்கு 1000 ரூ. அபராதம், தவறினால் 6 வாரம். சீதாலட்சுமி, சுப்பலட்சுமி இருவருக்கும் 2 வாரம்.

கல்கத்தாவில் நிர்மலா தேவி, ரேணுமாலா தேவி இருவருக்கும் சட்ட விரோதமான கூட்டத்தில் இருந்ததற்காக தலா 20 ரூ. அபராதம்.

அலகாபாத் மாகாண காங்கிரஸ் சர்வாதிகாரி பண்டித வெங்கடேச நாராயண திவாரிக்கு கிரிமினல் லா சட்டப்படி 6 மாதம் தண்டனை. சட்ட கலாசாலை மாணவர் ஒருவருக்கும், மற்றும் ஆறு பேருக்கும் தலா 6 மாதம் தண்டனை.

மட்ரா 25வது சர்வாதிகாரியான பாபு பிரஸாத் என்பவருக்கு 6 மாதம் கடுங்காவலும் 50 ரூ. அபராதமும். வித்யாதேவி, பர்சாராம் இருவருக்கும் தலா 6 மாதம்.

ஜபல்பூரில் சேத் கோவிந்த தாஸுக்கு சுயேச்சை தினத்தில் சம்பந்தப்பட்டதற்காக 1 வருஷம் கடுங்காவலும் 2000 ரூ. அபராதமும், தேவிப் பிரஸாத் சுக்லாவுக்கு 6 மாதமும் 100 ரூ. அபராதமும்.

சுயேச்சை தின சம்பந்தமாக டெல்லியில் 2 ஸ்திரீகள், 5 சன்னியாசிகள் உள்பட 24 பேர்களுக்கு தலா 3 மாதமும் 100 ரூ. அபராதமும்.

புதிய டெல்லியில் லெக்ஷ்மி தேவியோடு எட்டு பேருக்கு 3 மாதம் சிறையும் 50 ரூ. அபராதமும். அன்று கொடி வணக்கத்தில் கைது செய்யப்பட்ட ஏழு சிறுவர்கள் 18 வயது ஆகும் வரையில் ஜெயில் பள்ளிக்கூடத்தில் படிக்குமாறு அனுப்பப்பட்டனர்.

சென்னை கார்ப்பொரேஷன் பள்ளிக்கூடங்களில் ஹிந்தி கற்பிப்பதை ஆதரித்து ஒரு தீர்மானம் நிறைவேறியது. இது செய்கையில் காட்டப்பட வேண்டும்.

ஜப்பான் அரிசி ஏராளமாக ஸிலோனுக்கும் இந்தியாவுக்கும் வந்திறங்குவதற்கு ஏற்பாடாகியிருக்கிறதாம். இறக்குமதியானால் உள்ளூர் விலையை விட குறைவான விலைக்கே விற்கப்படுமாம்! நமது நெல் என்ன ஆவதோ?

சிறையில் பண்டித ஜவஹர்லால் அவ்வப்போது உபவாஸ விரதம் அனுஷ்டித்து வருவதாக டோராடூன் செய்தி ஒன்று கூறுகிறது. அவரோடு இருந்த இதர கைதிகள் வேறிடங்களுக்குச் சென்று விட்டபடியால், தனிக் கைதியாகவே அவர் இருந்து வருகிறார். அவருடைய மைத்துனர் எழுதியுள்ள "காஷ்மீர சரித்திரம்" என்ற நூலுக்கு ஜவஹர் ஓர் முகவுரை யெழுதிக் கொண்டிருக்கிறாராம்.

ரத்னகிரி சிறையிலுள்ள தேசபக்தர் அப்பா ஸாகிப் பட்டவர்த்தன் மீண்டும் தமது உபவாஸ விரதத்தை ஏற்றுக்கொண்டு விட்டாராம். இவர் தாழ்ந்ததாகக் கருதப்படும் கக்கூஸ் வேலை தமக்கு தரப்பட வேண்டுமெனக் கேட்டதும், மறுக்கப்படவே உண்ணா விரத மேற்றதும், அவரோடு சேர்ந்து ஏரவாடாவில் காந்திஜி உண்ணா விரத மேற்றதும் பழங் கதைகள். இதுவரை சர்க்கார் பட்டவர்த்தன் கோரியதை நிறைவேற்றாததால் அவர் மீண்டும் உண்ணா விரதமேற்று விட்டார். காந்திஜி என் செய்வாரோ?

சுத்தக் கதர் என்பதற்கு இடையூறாக போலிக் கதர் சிருஷ்டிப்பதைத் தடுப்பதற்காக டெல்லி சட்ட சபையில், ஸ்ரீமான் சயாப் பிரஸாதர் கொண்டு வந்த மசோதா அங்கத்தினர்களின் பரிசிலனைக்கு விடப்பட்டது.

மத சம்பந்தமான விஷயங்களில் சட்ட சபை தலையிடா திருந்தால் காந்திஜியோடு ஹரிஜன முன்னேற்றத்தில் ஒத்துழைப்பதாக சில யதா பூர்விகள் தெரிவித்திருக்கின்றனர்.

டி வாலரா மீண்டும் ஐரிஷ் குடியரசிற்குத் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார்.

24 மணி நேரத்துக்குள் டெல்லியை விட்டு வெளியேறும்படி சர்தார் சிங்குக்கு உத்தரவு.

Edited and Published by S. Subramaniam and
Printed by M R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.